
உ
சிவமயம்

# சிவபூமி

மாதாந்த செய்திப் பத்திரிகை
Monthly Journal of Sivapoomi

சிவம்–05 சுபகிருது வருடம் ஆனித் திங்கள் ஜூன் 2024 பூமி–14

## நாட்டின் சகல தமிழ் மாணவர்களுக்கும் ஒரே விதமாக கல்வியை வழங்க வேண்டும்



வடக்கில் சிறந்த பெறுபேறு பெற உழைத்தவர்கள் பாராட்டிற்குரியவர்கள் ஆவர். கடந்த க.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேறுகள் வடக்கின் கல்வி விருத்தியில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது எனலாம். கல்வியில் வடக்கு மாகாணம் வீழ்ச்சியடைந்து வருகின்றது என்பது பலராலும் பேசப்பட்டு வந்த விடயமாகும். அவ்வாறில்லை நாம் எமது கல்வியில் அக்கறையுடனேயே இருக்கின்றோம் என்பதனை இப்பெறுபேறுகள் மூலம் சில கல்லூரி அதிபர் ஆசிரியர்கள் நிரூபித்துள்ளனர். குறிப்பாக யாழ்ப்பாணத்தில் யாழ் இந்து கல்லூரியில் 56 மாணவர்கள் 3A சித்திகள் பெற்றுள்ளனர் என்பது ஒரு வரலாறு ஆகும். அதிபர் ஆசிரியர்களது அக்கறை மற்றும் பெற்றோரது அயராத உழைப்பு என்பவற்றுடன் மாணவர்களது விடாமுயற்சியே இச்சாதனைக்கு காரணமாகும்.

வேம்படி மகளீர் கல்லூரி, சாவகச்சேரி இந்து கல்லூரி போன்ற கல்லூரிகளும் சிறந்த பெறுபேறுகளை பெற்றிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும். மற்றும் மீசாலை வீரசிங்கம் பாடசாலை மாணவர்கள் மிகப்பெரிய சாதனையைப் படைத்துள்ளனர். அதாவது அப்பாடசாலையில் விஞ்ஞான பிரிவு ஆரம்பிக்கப்பட்டு ஓரிரு ஆண்டுகளே ஆன போதும் மிகப்பொரிய சாதனையை புரிந்துள்ளனர். அதே போன்று பண்டதரிப்பு மகளீர் கல்லூரி மாணவி யாழ் மாவட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார். இச்சாதனை அப்பாடசாலையின் அதிபர், ஆசிரியர் மற்றும் பெற்றோரது அயராத உழைப்பிற்கு கிடைத்த வெற்றி எனலாம். இதுமட்டுமன்றி வன்னி பகுதியிலும் முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டத்திலுள்ள பாடசாலைகளும் மிகச்சிறந்த பெறுபேறுகளை பெற்று சாதனை படைத்துள்ளனர். இந்நிலையானது தொடர வேண்டும்.

முதலாவது தடவையாக பரீட்சைக்கு தோற்றி சித்தி பெறாத மாணவர்களை இரண்டாவது தடவையாக தோற்றி சிறந்த பெறுபேறு பெறுவதற்கு அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் அனைவரும் ஒன்றிணைந்து பாடுபட வேண்டும். இரண்டாவது தடவையாக பரீட்சைக்கு தோற்றுபவர்கள் பாடசாலைக்கு செல்லும் வழக்கம் இன்று அற்றுபோய் விட்டது. இரண்டாவது தடவையர்க பரீட்சைக்கு தோற்றி சிறந்த பெறுபேறுகளை பெற்று சிறந்த பேராசிரியர்களாக ஆனோர் அனேகமானோர் உள்ளனர். எனவே முதற் தடவை பரீட்சையில் குறைந்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் இரண்டாவது தடவையாக சாதிப்பார்கள் என்பது பொதுவான நம்பிக்கையாகும். எனவே இரண்டாவது தடவையாக பரீட்சைக்கு தோற்றுபவர்கள் தொடர்பாக அனைத்து பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் இணைந்து கூட்டாக முயற்சி எடுக்க வேண்டும். தனியார் கல்வி நிலையங்களில் நல்ல விற்பன்னர்கள் பணியாற்றுகின்றார்கள். தனியார் கல்வி நிலையங்களின் கற்றலுக்கான பயிற்சியும் இவ்வேளையிலே பாராட்டுவதற்குரியதாகும்.

எனினும் மரபு சார்ந்த பாடசாலை கல்வி என்பது பாடசாலை கல்வியோடு இணைபாடவிதான செயற்பாடுகளையும் ஒரு மாணவனுக்கு அளிக்கின்றது. இது தனியார் கல்வி நிலையங்களில் காணப்படாது. தனியார் கல்வி நிலையங்களில் மாணவர்களை பரீட்சைக்கு மாத்திரமே தயார் செய்வார்களே தவிர மாணவர்களுக்கு வாழ்விற்கு முழுமையான ஒரு ஆளுமையை தனியார் கல்வி நிலையத்தினால் தரமுடியாது. எனவே தற்போது கிடைத்த பெறுபேறுகளில் அதுவும் குறிப்பாக சில மாணவர்கள் இணைபாடவிதானத்திலும் சாதனை படைத்து பரீட்சையிலும் சாதனையை நிலைநாட்டியுள்ளனர். இந்நிகழ்வு இணைபாடவிதான செயற்பாடுகள் கற்றலுக்கு தடையாக காணப்படும் என்று பெற்றோர் மற்றும் மாணவர்கள் கருதுவது பெரும் தவறாகும் என்பதனை எடுத்துக் காட்டுகின்றது.


ஆசிரியர்
கலாநிதி. செஞ்சொற்செல்வர். ஆறு. திருமுருகன்

உதவி ஆசிரியர்
திரு. ச.சந்தோஷன்

வடிவமைப்பாளர்
திருமதி. ச. மதுஷா


பெரிய கல்லூரிகளில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்கள், பாடசாலை கல்வியோடு விளையாட்டுத் துறையிலும் வேறு துறைகளிலும் (தமிழ்த்தின போட்டிகள், சமூக விஞ்ஞான போட்டிகள்) சாதனை படைத்துள்ளமை குறிப்பிடதக்கதாகும்.

எனவே மாணவர்களை சீராக்குகின்ற முயற்சி தொடர வேண்டும். இப்போதைய காலத்தில் புலம்பெயர் சமூகம் ஆனது வடக்கு மாகாண பாடசாலைகளின் கல்வி வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பினை அளிக்கின்றமையை மறுக்க முடியாது. இவர்களின் பேருதவியும் பாடசாலை மாணவர்களின் பெறுபேறுகளின் உயர்விற்க்கு ஒரு காரணமாக காணப்படுகின்றது. பல பாடசாலைகளில் Smart class room மற்றும் வெவ்வேறு வசதிகளை புலம்பெயர் சமூகம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இது பாராட்டிற்குரியதாகும். எனவே எல்லோருமாக இணைந்து தமிழர்களின் பெரும் சொத்தாகிய கல்வியை மேம்படுத்த வேண்டும். மற்றும் வடக்கு, கிழக்கு, மலையகம் மற்றும் கொழும்பில் உள்ள தமிழ் மாணவர்கள் எல்லோருக்கும் பரீட்சையிலே சிறந்த பெறுபேறு பெறுவதற்கு இணைந்த ஒரு செயற்பாட்டை அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை பழைய மாணவர்கள் மற்றும் பாடசாலை நலன்விரும்பிகள் அனைவரும் இணைந்து ஏற்பாடு செய்து கருத்தரங்குகள், மாதிரி வினாத்தாள் கையேடுகள் என்பவற்றை நாடு முழுவதும் உள்ள நம் தமிழ் மாணவர்கள் அனைவருக்கும் வழங்கி ஒரே விதமாக கல்வி செயற்பாட்டை வழங்க வேண்டும். அவ்வாறு நிகழுமாயின் தமிழரின் கல்வி வளர்ச்சியை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது. இயல்பாகவே ஆற்றல் மிக்க தமிழ் மாணவர்கள் மேலும் ஓங்கி வளர்வார்கள் என்பதில் ஐயம் ஏதுமில்லை. அத்தோடு சிறந்த பெறுபேறுகளை பெற உதவிக்கரம் வழங்கிய பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் என்போர் எப்போதும் எமது நன்றியிற்கு உரியவர்கள் ஆவார்கள்.

# கலைப்பிரிவில் யாழ்.மாவட்டத்தில் முதலிடம்.



வெளிவந்த 2023ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கலைப்பிரிவில் வஜினா பாலகிருஷ்ணன் மாவட்ட ரீதியில் முதலாமிடத்தையும், நாடளாவிய ரீதியில் 32 இடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளார். இது குறித்து அந்த மாணவி கருத்து தெரிவிக்கையில், எனது தந்தை ஒரு மீன் வியாபாரி. பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையில் கல்வி கற்று, 2023ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு நான் கலைப்பிரிவில் தோற்றினேன். கலைப்பிரிவில் தமிழ், நாடகவியல் மற்றும் புவியியல் ஆகிய பாடங்களுக்கு 3ஏ சித்திகளை பெற்றேன். நான் சாந்தை கிராமத்தில் வசிக்கிறேன். எமது கிராமம் ஒரு பின்தங்கிய கிராமம். எமது கிராமத்தில் இருந்து யாழ்ப்பாண ரீதியில் சாதிக்க வேண்டும் என்பதே எனது கனவு. அதனை நிறைவேற்றியுள்ளேன். அன்றன்று கற்கின்ற விடயங்களை அன்றே வீட்டில் சென்று படிப்பதனால் கஷ்டம் இல்லாமல் இலகுவாக படிக்க முடியும். ஆசிரியர்கள் கற்பிக்கும்போது கவனத்தை சிதறவிடாமல் கற்க வேண்டும். தமிழ் பாட விரிவுரையாளராக வர வேண்டும் என்பது தான் எனது கனவு. என்னை இந்த நிலைக்கு உருவாக்கிய பெற்றோர், அதிபர், ஆசிரியர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார். குறித்த மாணவியின் வெற்றியை கொண்டாடுவதற்கு அந்த ஊர் மக்கள் அனைவரும் அவரது வீட்டில் குழுமியிருந்தமை நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அவர் மேலும் பல சாதனைகளை படைக்க அன்பான வாழ்த்துகள்.

# க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சாதனை படைத்த வாழ்வக மாணவர்கள்




க.பொ.த.(உ.த.) - 2023 (2024) பரீட்சைக்குத் தோற்றிய வாழ்வக மாணவர்கள் மூவருமே சித்தி பெற்றுள்ளனர். செல்வி சிவசக்தி லக்சிகா தமிழ், இந்து நாகரிகம், அரசியல் விஞ்ஞானம் ஆகிய மூன்று பாடங்களிலுமே A சித்தி பெற்று மாவட்ட மட்டத்தில் 97 வது இடத்தினையும் பெற்று, சாதனை படைத்துள்ளார்.செல்வி வெற்றிவேல் ஜனுபா கர்நாடக சங்கீதத்தில் A சித்தியும் தமிழ் C, அரசியல் விஞ்ஞானம் S பெற்றுள்ளார். இப் பரீட்சைக்குத் தோற்றிய மற்றுமொரு மாணவனான செல்வன் நவனீதன் கௌதமன் இந்து நாகரிகம், தமிழ் ஆகிய பாடங்களில் C சித்தியும் அரசியல் விஞ்ஞான பாடத்தில் S சித்தியும் பெற்றுள்ளார். மூவருக்கும் வாழ்த்துகள்

# துர்க்கா புரம் மகளீர் இல்லத்தின் சாதனை

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் முன்னணி பெறுபேறுகள் பெற்று ஆலயத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்கள்.

01. செ.மீனலோஜினி - A2B
02. லோ.பிரியங்கா - ABC
03. ஜெ.ஜெயந்தா - ABC
04. ச. துவாரகா - 3B
05. பி. திவ்யா 2BC
06. க . தமிழரசி 2BC

சாதனை மாணவிகளுக்கு அன்பான வாழ்த்துகள். அதேநேரம், மலையகத்திலிருந்து 29 பிள்ளைகள் துர்க்காபுரம் மகளிர் ஆன்மிக விடுதிச்சாலையில் இணைந்து ,உயர்தரக் கல்வியைத்தொடரவுள்ளனர். இவர்களுக்கான கட்டில்களை ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டு நாத சுவாமி அவர்கள் ஏற்பாடு செய்து தந்தார்கள்.



# இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது வழங்கும் வைபவம்





செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களின் 63 வது பிறந்தநாள் குறித்து அறநிதியச் சபை நடாத்தும் இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது வழங்கும் வைபவம் 02.06.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

அந்த வகையில் 2024ம் ஆண்டிற்கான இளைய தலைமுறை சாதனையாளர் விருது பலரின் உயிரைக்காக்கும் இருதய சத்திர சிகிச்சை நிபுணர் ஞா.காந்திஜி அவர்களுக்கும், 13வயதில் பாக்குநீரிணையை நீந்திக் கடந்து சாதனை நிலைநாட்டிய திருகோணமலை கோணேஸ்வரா கல்லூரி மாணவன் ஹரிகரன் தன்வந்த் ஆகிய இருவருக்கும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.










# புதூர் நாகதம்பிரான் ஆலயத்தில் சிறப்பாக நடந்த பொங்கல் உற்சவம்





புதுமை மிகுந்த புதூர் நாகதம்பிரான் ஆலய வைகாசி பொங்கல் உற்சவம் பல்லாயிரக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் 03.05.2024 பக்தி பூர்வமாக நடைபெற்றது.







# இலங்கை கிரிக்கெட்டில் சாதிக்கும் தமிழ் வீராங்கனை சயந்தினி

கடந்த சில நாட்களுக்கு முன்னர் இடம்பெற்ற ரு23 பெண்களுக்கான ளேடு சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில், தன் அறிமுக போட்டியாக விளையாடியிருக்கிறார் மன்னாரின் இளம் வேகப்பந்து வீராங்கனை சயந்தினி! கொழும்பு அணி சார்பாக ஆரம்பப் பந்துவீச்சாளராக பந்துவீசி இரண்டு ஓவர்களில் பத்து ஓட்டங்களை விட்டுக்கொடுத்திருந்தார். முதலில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு 20 ஓவர்களில் 7 விக்கட் இழப்பிற்கு 98 ஓட்டங்களைப் பெற, அதனை 6 விக்கட் இழப்பில் 18 ஆவது ஓவரில் கலைத்து அடித்து சாம்பியனாகியது தம்புள்ளை அணி.! ளேடு இல் கொழும்பு அணிக்காக விளையாட வாய்ப்புக் கிடைத்தமையும், அதுவும் இறுதிப்போட்டியில் ஆரம்பப் பந்துவீச்சாளராக வாய்ப்பு வழங்கப்பட்டமையும் சயந்தினியின் திறமைக்கு ஒரு சான்று..! சாதனைப் பெண் சயந்தினி வெகு விரைவில் இலங்கை மகளிர் அணியில் இடம்பெற வாழ்த்துகள்.



# ”வைத்தியசாலை வீதியில்” மரநடுகை திட்டம்.

வைத்தியசாலை வீதியானது பொது மக்களின் அதிகரித்த பாவனையில் உள்ள சன நெரிசலான பகுதி. தினமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வீதியின் ஊடாக நடந்தும் ஏனைய வாகன வசதியினூடாகவும் பயணிக்கின்றார்கள். ஆகவே கடுமையான வெயில், வெப்பம் மற்றும் புறக் காரணிகளால் அவர்களுக்கு மிகவும் சிரமம் ஏற்பப்படுகின்றது. எதிர்காலத்திலாவது இவற்றை நிவர்த்தி செய்யும் நோக்குடன் யாழ் போதனா வைத்தியசாலை, யாழ் மாநகர சபை, மற்றும் புசநநெ டுயலநச சுற்றுச்சூழல் அமைப்பு ஒன்றாக இணைந்து வைத்தியசாலை முன்புறமாக காணப்படுகின்ற வீதியின் நடுப்பகுதியில் மரங்கள் நடும் திட்டத்தை முன்னெடுத்தன. வீதியின் நடப்பகுதியில் பொருத்தமான குழிகளை வெட்டி தேவையான உரம் கலந்த மண்ணை இட்டு பாதுகாப்பாக வளரக்கூடிய வகையில் உயர்ந்து வளரக்கூடிய நிழல் மரங்கள் நட்டு வைக்கப்பட்டன. இவ்வாறு வீதிகள், பொது இடங்கள், விளையாட்டு மைதானங்கள், மற்றும் பொருத்தமான இடங்களில் இவ்வாறு மரங்கள் நடப்பட வேண்டும்.







# நல்லை ஆதீனம் வருகை தந்த ஐ.நாவின் பிரதிநிதி

03.06.2024 மாலை, நல்லை ஆதீனத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி திரு. மார்க் ஆண்ட்ரே பிராஞ் அவர்கள் வருகை தந்து நல்லை ஆதீன குரு முதல்வர், செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் மற்றும் ஆன்மீக சுடர் ரிஷி. தொண்டுநாத சுவாமிகள் ஆகியோருடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டு இருந்தார்கள்.







# சிறப்பாக நடைபெற்ற செஞ்சொற்செல்வரின் பிறந்தநாள் நிகழ்வுகள்







”ஆசறு நல்ல நல்ல
அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே”

சம்பந்தர் பெருமானின் கோளறு பதிகத்தின் வரிகள் இவை. நவக்கிரகங்களின் தன்மை பற்றி கூறிய சம்பந்தர் அவற்றின் பார்வை எத்தகையதாக இருந்தாலும், இறைவன் மீது உண்மை பக்தியும் நம்பிக்கையும் கொண்ட மெய்யடியார்களுக்கு நாளும் கோளும் நல்லனவே செய்யும் என்கிறார். சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லாமல் எல்லாவற்றுக்கும் நாளும் கோளும் பார்த்து, நவக்கிரகங்களுக்கு அஞ்சி நற்காரியங்களையும் பிற்போட்டுக் கொண்டிருக்கும் எம்மவர் மத்தியில்
கலாநிதி ஆறு. திருமுருகன் ஐயா வித்தியாசமாக தெரிகிறார்.

தொடர்ந்து சமயம் சார்ந்தும் சமூகம் சார்ந்தும் பல பணிகளை இடையறாது ஆற்றி வருகிறார். இறைவனை முழுமையாக நம்பி ஒரு நற்கருமம் தொடங்கினால், சாதகப்படி எங்கள் பலன் எதுவாக இருந்தாலும் நாளும் கோளும் நல்லனவே செய்யும் என்கிற நம்பிக்கை இவருக்கு உண்டு. இதுவரை மட்டுமல்ல எப்போதும் அவர் தொட்டவை எல்லாம் துலங்கியதாகத்தான் வரலாறு உள்ளது.

செஞ்சொற்செல்வர் அவர்களின் பிறந்தநாள் அன்று (28.05.2024) அதிகாலை தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட வழிபாடுகளில் கலந்து கொண்ட செஞ்சொற்செல்வர் அவர்களுக்கு மகளீர் இல்ல பிள்ளைகள் உள்ளிட்ட ஆலய சமூகத்தினர் தங்கள் அன்பை வெளிப்படுத்தி ஆசிகளை பெற்றனர். அதன் பின்னர் கலந்து கொண்ட அனைவருக்கும் காலை உணவு வழங்கப்பட்டது.

சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் அவர்களின் 63 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, சிவபூமி அறக்கட்டளையினால் முதலாவதாக கொள்வனவு செய்யப்பட்ட பூமியில், சிவபூமி மனவிருத்திப் பாடசாலை மாணவர்கள் அவருடன் சேர்ந்து 63 மரக்கன்றுகளை (28.05.2024) நாட்டி வைத்தனர்.

சிவபூமி தனது பல்தரப்பட்ட சேவைகளால் இன்று பல்கிப் பெருகி பல கிளைகளோடு காணப்பட்டாலும் சிவபூமியின் ஆரம்பம் என்பது மனவிருத்திப் பாடசாலை தான். அந்த வகையில் தலைவரின் பிறந்த தினம் அந்த இடத்தில் கொண்டாடப்பட்டமை சிறப்பம்சமாகும். மேலும், நாட்டிய மரக்கன்றுகள் வேரூன்றி வளர்ந்து பயன்தருவது போல, சிவபூமி மனவிருத்திப் பாடசாலை மாணவர்களும் வளர்ந்து எமது மண்ணிற்கு பயனுள்ளவர்களாக வேண்டுமென்பதே செஞ்சொற்செல்வர் அவர்களின் பெரு விருப்பம்.

இந்நிகழ்வைத் தொடர்ந்து பிள்ளைகளுக்கு மதிய உணவு மற்றும் சிற்றுண்டி என்பவற்றை தலைவர் பரிமாறி மகிழ்ந்தார். இந்நிகழ்வில் ஆன்மீகச்சுடர் ரிஷி. தொண்டுநாத சுவாமிகளுடன் சிவபூமி உறவுகளும் கலந்து கொண்டனர்.

அடுத்ததாக மாலை வேளையில் தொல்புரத்தில் உள்ள சிவபூமியின் முதியோர் இல்லத்தில் உள்ள மூத்தோர் ஏற்பாடு செய்திருந்த விழாவில் கலந்து கொண்ட செஞ்சொற்செல்வர் அவர்களுக்கு பலரும்

வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்ந்தனர். முதியோருடன் இராப்போசனத்தையும் உண்டு அவர்களின் அன்பு மழையில் செஞ்சொற்செல்வர் முழுவதுமாக நனைந்தார் என்றுதான் சொல்ல வேண்டும்.

நிகழ்வுகளுக்கெல்லாம் மணிமகுடம் வைத்தது போல கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களின் பிறந்தநாள் அறக்கொடை நிதிய சபை ஏற்பாட்டில் இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது -2024 நிகழ்வு எதிர்வரும் 02.06.2024 தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தின் திருமண மண்டபத்தில் இடம்பெற தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பலரின் உயிரைக்காக்கும் இருதய சத்திர சிகிச்சை நிபுணர்.ஞா.காந்திஜி அவர்களுக்கும், 13வயதில் பாக்குநீரிணையை நீந்திக் கடந்து சாதனை நிலைநாட்டிய திருக்கோணமலை கோணேஸ்வராக்கல்லூரி மாணவன் ஹரிகரன் தன்வந்த் அவர்களுக்கும் இவ்வாண்டுக்கான விருது கொடுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



# அகிலம் போற்றும் அன்னையின் குருபூசை நிகழ்வு



தங்கம்மா அப்பாக்குட்டி கடந்த 2008 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆம் திகதி தனது 83 ஆவது வயதில் இவ்வுலகை விட்டுச் சென்றார். இதயமே இல்லாத மனித கூட்டத்துள் இதயத்துடன் வாழ வழி காட்டிய உத்தமியின் சேவையினை நாம் என்றும் பெருமையுடன் நினைவு கூருவோம். 16வது குருபூசை வைபவம் வரும் 19.06.2024ம் திகதி புதன்கிழமை காலை 9.00 மணிக்கு தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது.

செஞ்சொற்செல்வர் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் அளவெட்டி கும்பிளாவைளைப் பிள்ளையார் ஆலய பிரதம குரு இராமசூரிய பிரபாகர குருக்கள் அவர்களிற்கும், மாதகல் சாந்தநாயகி சமேத சந்திர மௌலீஸ்வர ஆலய பிரதம குருக்கள் இரத்தின ஐயர் மணிக்கவாசக் குருக்கள் அவர்களிற்கும், விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். எனவே தங்கள் அனைவரையும் அன்புடன் துர்க்கையம்மன் ஆலய சமூகத்தினர் அழைக்கிறார்கள்.

# மகாஜனாக் கல்லூரி அதிபரின் மணிவிழா



புகழ்பூத்த தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் திரு.ம.மணிசேகரன் அவர்கள் 24.05.2024 அன்று 60 வயதைப் பூர்த்திசெய்து ஓய்வுபெற்றார். அவரது ஆசிரியப்பணி, அதிபர் சேவை என்பவற்றை கௌரவிக்கும் முகமாக , அவரது சேவைக்காலத்து பழைய மாணவர்களால் 09.06.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரியின் பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபத்தில் மணி விழா நடாத்தப்பட்ட நிகழ்வில் பெருமளவு மக்கள் கலந்து கொண்டு வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டார்கள்.

# பிறக்கிருத்திய செயற்பாடுகளில் சாதித்தனூடாக மருத்துவ பீடத்திற்கு தெரிவாகியுள்ள இந்துவின் மைந்தன் துஸ்யந்தன் பிரசாந்தன்.

மூலக்கூறு உயிரியல் (molecular biology) பாடத்திற்கு தெரிவாகியிருந்த து.பிரசாந்தன் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தேசிய மட்ட சாதனையாளர்கள் நேர்முகத்தேர்வின் பின்னர் ஊவா வெல்லச மருத்துவ பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். க.பொ.த உயர்தரப் பரீட்சையில் பிரதான மூன்று பாடங்களிலும் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளுக்கு Z புள்ளி கணிக்கப்படுகிறது. எனினும் மாணவர் ஒருவர் இணைப்பாடவிதானத்தில் வெளிப்படுத்திய திறமைகளுக்காக பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு மேலதிக Z புள்ளிகளை வழங்கி அவர்களுக்கு மேலதிக வாய்ப்பை வழங்கி வருகிறது. 2022 ம் ஆண்டில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து 99 மாணவர்கள் மருத்துவ பீடத்திற்குத் தெரிவாகினர் மேலும் இருவர் விசேட வகையில் தெரிவு செய்யப்பட்டனர். இதனடிப்படையில் யாழ் இந்துவின் க.பொ.த உயர்தரம் 2022 உயிரியல் பிரிவு மாணவனுக்கு மருத்துவ பீடம் (ஊவா வெல்லச பல்கலைக் கழகம்) செல்லும் வாய்ப்பு கிடைத்தது. எனவே மாணர்வர்கள் மேற்படி விடயங்களைக் கருத்திற் கொண்டு இணைப்பாடவிதானத்தில் கவனமெடுத்து தங்களது ஆளுமைத் திறனை உறுதி செய்து கொள்ளல் வேண்டும்.



# கோணமலையை வந்தடைந்த பிரமாண்ட காண்டாமணி







மாதுமை உடனுறை திருக்கோணேஸ்வரர் பெருமான் திருத்தலத்திற்கு லண்டனில் வசிக்கும் திருவாளர் ம. ஜெயசீலன், பா. சுரேசன் மற்றும் ச.லிங்கேஸ்வரன் ஆகியோர் தலைமைப் பொறுப்பேற்று வெளிநாடுகளில் வசித்து வரும் ஈழநாட்டினை பூர்வீகமாக கொண்ட சைவ அடியார்களின் நிதி பங்களிப்புடன் செய்யப்பட்ட ஆயிரம் கிலோ நிறை கொண்ட காண்டாமணி திருக்கோனணேஸ்வர ஆலய பரிபாலன சபையினரிடம் 31.05.2024 வழங்கிவைக்கப்பட்டுள்ளது

லண்டன் மாநகர் வாழ் இந்து மக்களின் முன்னெடுப்பில் உலகெங்கும் பரந்து வாழும் இலங்கை இந்து மக்களின் பங்களிப்புடனும் , திருக்கோணேஸ்வரப் பெருமானுக்காக லண்டனில் தயாரிக்கப்பட்ட 1000 முப (2205 டடி) நிறையுடைய நவீன முறையில் மின்சாரத்தில் தானாக இயங்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள காண்டா மணியானது பெருமானின் ஆலயத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன், திருக்கோணேஸ்வர ஆலய பரிபால-னசபையினரிடம் கையளிக்கப்பட்டது. இக் காண்டாமணியானது மணி கே-ாபுரம் அமைக்கப்பட்டு நிரந்தரமாக பிரதிஷ்டை செய்வதற்குரிய அனுமதி-களை உரிய திணைக்களங்களிடம் திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபை எழுத்து மூலமாக கோரியுள்ளனர்.

சிவபூமி அறக்கட்டளைத் தலைவரும் செஞ்சொற் செல்வர் திரு ஆறுதிருமுரு-கன் ஐயா அவர்களின் வேண்டுதலுக்கு அமையவும் திருக்கோணேஸ்வர பரிபாலன சபையின் அனுமதியுடனும் இக்கைங்கரியம் ஆரம்பிக்கப்பட்டது. இதற்க்கான பங்களிப்பை வழங்கிய உலகில் வாழும் அனைத்து இந்து மக்களுக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கிறோம்.


# கனடா நாட்டு தூதுவர் ஈழத்து இந்து சமயத்தலைவர்களுடன் சந்திப்பு

கனடா நாட்டுத்தூதுவர் இந்துசமயத் தலைவர்களைச் சந்திப்பதற்காக நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்துக்கு வருகைதந்தார். ஆதீன முதல்வர் சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்,செஞ்சொற்செல்வர். கலாநிதி,ஆறு.திருமுருகன்,ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோருடன் நாட்டின் இன்றைய சூழ்நிலை தொடர்பாக கலந்துரையாடினார்.நல்லை ஆதீன முதல்வர் கனடாநாட்டில் வாழும் எம்மக்களைக் கௌரவமாக அங்கு வழிநடத்துவதற்கு நன்றி கூறினார்.மேலும் இக்கலந்துரையாடலில் பங்குபற்றிய மூவரும் இனப்பிரச்சனைத் தீர்வு தொடர்பாக கனடா இலங்கை அரசுடன் பேசவேண்டும் என்பதனை வலியுறுத்தினர். மேலும் கனடா துணைத்தூதரகத்தை வடக்கில் நிறுவி,மக்களுக்கு உதவவேண்டும் எனவும்,கனடா தூதுவராலய விசா அலுவலகம் வடக்குப்பகுதியில் அமையவேண்டிய அவசியத்தை விளக்கினர்.தொடர்ந்து போரில் இறந்தவர்களுக்கு மனிதநேய அடிப்படையில் வழிபாடு செய்யும் உரிமையை எடுத்துரைத்தனர்.





# சாதனைத் தமிழ் சிறுவன் தன்வந்திற்கு முத்திரை வெளியிடப்பட்டது!




13 வயதில் பாக்கு நீரிணை நீந்தி கடந்து சாதனை படைத்த ஹரிகரன் தன்வந்த் அவர்களுக்கு கடந்த 31.05.2024 அன்று தி.ஃ.இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில், இலங்கை அஞ்சல் திணைக்களகத்தின் முத்திரை பணியத்தினால் முத்திரை வெளியிடப்பட்டது. இலங்கை அஞ்சல் திணைக்களக வரலாற்றில் மிக குறைந்த வயது கொண்டவருக்கு முத்திரை வெளியிடுவது இதுவே முதல் தடவை ஆகும். 200 வருட இலங்கை அஞ்சல் வரலாற்றில் சிறப்பான நாளாகும். அந்நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக திரு. றுவான் சத்குமார - அஞ்சல்மா அதிபர், திரு. ரஜித மு. ரணசிங்க - பிரதி அஞ்சல்மா அதிபர், சிறப்பு விருந்தினர்களாக திரு. பி. மதனவாசன் - கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை தவிசாளர் ஆகியோரும், மற்றும் பலரும் கலந்து கொண்டனர். சாதனை நாயகன் தன்வந்திற்கு எமது வாழ்த்துக்கள்.




# இனப்பிரச்சினையைத் தீர்த்து தமிழர்கள் சுயகௌரவத்துடன் வாழ பாரத பிரதமர் வழிசெய்ய வேண்டும் - கலாநிதி ஆறு திருமுருகன்



இந்தியாவின் அயல்நாடான இலங்கையில் தமிழ்பேசும் மக்களின் நீண்டகால பிரச்சினையாக இருக்கும் இனப்பிரச்சினையை தீர்த்துவைத்து சுயகௌரவத்துடன் வாழ பாரத பிரதமர் வழிசெய்யவேண்டும் என அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவர் கலாநிதி ஆறுதிரு முருகன் பாரத பிரதமருக்கான வாழ்த்துரையில் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்

பாரத தேசத்தின் பிரதமராக மூன்றாவது தடவையாக மக்களால் தெரிவுசெய்யப்பட்டுள்ள இச் சந்தர்ப்பத்தில் தங்களை வாழ்த்துவதில் ஆனந்தம் அடைகின்றேன். தாங்கள் ஆற்றுகின்ற உன்னதமான சேவைக்கு மக்கள் தந்த பரிசாகக் கருதுங்கள் இதேவேளை இந்தியாவின் அயல் நாடாகிய இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் நீண்டகால பிரச்சினையாக இருக்கின்ற இனப்பிரச்சினையே தீர்த்து வைத்து சுய கௌரவத்தோடு தமிழினம் வாழ தாங்கள் வழிசெய்யவேண்டும்.

பல லட்சம் மக்களின் உயிரை இழந்த நிலையில் செல்லெண்ணா துயருடன் வாழும் தமிழர்களின் அவலத்தை நிரந்தரமாகப் போக்குவதற்கு தாங்கள் வழி செய்யவேண்டும். பாரத தேசத்தை உலக அரங்கில் உயர் நிலைக்குக் கொண்டு வரும் பாரியைப் பொறுப்பு உங்களுக்குரியது அதற்கு ஆணை தந்த மக்களின் கருத்துக்கு மதிப்பளித்து அனைத்து மக்களையும் சமமாக நேசித்து தங்கள் பணி தொடர அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சார்பில் யாழ்ப்பாணத்திலிருந்து வாழ்த்துகின்றேன் என்றார்.

# ஆத்ம சாந்தி பிரார்த்தனை



தெல்லிப்பழை யூனியன் கல்லூரியை தூக்கி நிறுத்திய அதிபர் வரிசையிலே அசைக்க முடியாத இடத்தில் இருக்கின்ற எமது பேர் அன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய அதிபர் திரு கதிர்பாலசுந்தரம் அவர்கள் 01.06.2024 கனடா நாட்டில் இயற்கை எய்தியுள்ளார்.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திப்பதோடு ஆழ்ந்த அஞ்சலிகளையும் சிவபூமி சமுகம் தெரிவித்துக் கொண்டு,அன்னாரது குடும்பத்தின் ஆழ்ந்த துயரிலும் பங்கெடுத்துக் கொள்கின்றது

# பலவீனத்தையும் பலம் ஆக்கலாம் (குட்டிக்கதை)



ஜப்பானில் பத்து வயது சிறுவன் ஒருவனுக்கு . ஜூடோ சாம்பியனாக வேண்டும் என்பது இலட்சியமாக இருந்தது. ஆனால், அவன் ஒரு மாற்றுத்திறனாளி. அவனுக்கு இடது கை கிடையாது. கைகளும், கால்களும் வலுவாய் இருப்பவர்களுக்கே ஜூடோ சாம்பியன் ஆவது என்பது பெரும் சவால். ஒரு கையில்லாத சிறுவன் என்ன செய்வான் ? பல பயிற்சியார்களிடம் சென்றான். எல்லோரும் அவனை பரிதாபமாய்ப் பார்த்துவிட்டு திருப்பி அனுப்பினார்கள். சிறுவன் மனம்தளரவில்லை. தொடர்ந்து முயற்சி செய்தான்.

இறுதியில் ஒரு பயிற்சியாளர் அவனுக்கு ஜூடோ கற்றுத் தர ஒப்புக் கொண்டார். பயிற்சி வகுப்பு தொடங்கியது. பயிற்சியாளர் ஒரே ஒரு தாக்குதலை மட்டும் அவனுக்குக் கற்றுக் கொடுத்தார். நாட்கள், வாரங்கள், மாதங்கள் பல ஓடின. பயிற்சியாளர் வேறு எதையும் கற்றுக் கொடுப்பதாகத் தெரியவில்லை. சிறுவன் சோர்ந்து போனான். பயிற்சியாளரே.. ”நான் ஜூடோ சாம்பியன் ஆக இந்த ஒரு தாக்குதல் தெரிந்தால் மட்டும் போதாதே. வேறு எதுவும் கற்றுத் தருவீர்களா?” என்றான். ”இந்த ஒரே ஒரு தாக்குதலில் நீ வல்லவன் ஆனால் போதும்” என்றார் பயிற்சியாளர். பயிற்சியாளர் சொல்லிவிட்டால் மறு பேச்சு ஏது ? சிறுவனும் பயிற்சியைத் தொடர்ந்தான். ஒரே ஒரு தாக்குதில் மட்டும் நன்றாக கற்று தேர்ந்தான். சாம்பியன்களுக்கான போட்டி ஆரம்பமானது.! முதல்ூபோட்டி:- அனைத்தும் கற்றுத் தேர்ந்த எதிராளி. ஒரே ஒரு தாக்குதல் மட்டும் தெரிந்த இந்தச் சிறுவன். போட்டி ஆரம்பமானது. பார்வையாளர்கள் எல்லோரும் ஆச்சரியப் படும் விதமாக சிறுவன் வெற்றிப் பெற்றான். இரண்டாவதுூபோட்டி:- அதிலும் அவனுக்கே வெற்றி. அப்படியே முன்னேறி அரைூஇறுதிப்போட்டி வரை சென்றான். அதிலும் கொஞ்சம் போராடி வென்று விட்டான்.



தற்போது இறுதிப்போட்டி. எதிரே இருப்பவன் பலமுறை சாம்பியன் பட்டம் பெற்றவன். ஒரு கை இல்லாத எதிராளியைப் பார்த்து அவனுக்கு கொஞ்சம் பரிதாபமும், இளக்காரமும் சிறுவன் சளைக்கவில்லை. போட்டி ஆரம்பமானது. முதல் சுற்றில் சிறுவனை அடித்து வீழ்த்தினான் எதிராளி. சிறுவனின் நிலையைக் கண்டு பார்வையாளர்களுக்கு அதிர்ச்சி. போட்டியை நிறுத்திவிடலாமா..? என்கின்றனர் போட்டியை நடத்துபவர்கள். “வேண்டாம்., பையன் சண்டையிடட்டும்” என்கிறார் பயிற்சியாளர். இந்தச் சிறுவனோடு சன்டையிட இனிமேல் பாதுகாப்புக் கவசம் தேவையில்லை என எதிராளி அலட்சியமாய் வந்திறங்கினான். சிறுவன் தனக்குத் தெரிந்த அந்த ஒரே தாக்குதலை பலமாய் நிகழ்த்தினான். எதிராளி வீழ்ந்தான். சிறுவன் சாம்பியன் ஆனான். பார்வையாளர்கள் நம்ப முடியாமல் பார்த்தார்கள், போட்டியாளர்களுக்கோ ஆச்சரியம். அந்தப் சிறுவனுக்கே தனது வெற்றியை நம்ப முடியவில்லை. அன்று மாலை பயிற்சியாளரிடம் கேட்டான்.பயிற்சியாளரே..!

”நான் எப்படி இந்த போட்டியில் வெற்றிப் பெற்றேன்?” ”ஒரே ஒரு தாக்குதலை மட்டும் வைத்துக் கொண்டு வெற்றி பெற்றிருக்கிறேனே” என்றான். புன்னகைத்தபடியே பயிற்சியாளர் சொன்னார். “உனது வெற்றிக்கு இரண்டு காரணங்கள். ஒன்று ஜூடோவிலுள்ள மிகக் கடுமையான ஒரு தாக்குதலை நீ கற்றுத் தேர்ந்திருக்கிறாய். இரண்டாவது இந்தத் தாக்குதலைத் தடுக்க வேண்டுமானால் எதிராளிக்கு ஒரே ஒரு வழி தான் உண்டு. உனது இடது கையைப் பிடிக்க வேண்டும். உனக்குத் தான் இடது கை கிடையாதே..! ”உன்னுடைய அந்த பலவீனம் தான் பலமானதாய் மாறி உன்னை சாம்பியன் ஆக்கியிருக்கிறது!” பயிற்சியாளர் சொல்லச் சொல்ல சிறுவன் வியந்தான். தனது பலவீனமே பலமாய் மாறிய அதிசயத்தை நினைத்து நினைத்து மகிழ்சியடைந்தான்.

நாம் ஒவ்வொருவரின் ஆழ்மனமும் திறமைகளின் கடல். அதில் மூழ்கி முத்தெடுப்பதும், நத்தையெடுப்பதும் மூச்சடக்கி நாம் மூழ்குவதைப் பொறுத்தது. ஒவ்வொரு மனிதனுக்கும் இறைவன் தனித் தனித் திறமைகளைக் கொடுத்திருப்பான். அதை கண்டுபிடித்து செயல் படுத்துவதில் நமது வெற்றி உள்ளது..

# யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெற்றுவரும் தொடர் கருத்தரங்குகள்

க.பொ.த உயர்தர புதுமுக மாணவர்களுக்கான வினையூக்கி திசைமுகப்படுத்தல் செயலமர்வில் பின்வரும் வளவாளர்கள் கலந்துகொண்டனர்.

2024.06.06 காலை 8.00 - 10.30 "மன ஆளுமையும் கல்வியும்" பற்றிய அமர்வு தொண்டு நாத சுவாமிகள், ஹவாய் ஆதீன முதல்வர், அமெரிக்கா அவர்களால் நடைபெற்றது.




2024.06.07 வெள்ளிக்கிழமை காலை 8.30 இலிருந்து 10.30 வரை இ.சர்வேஸ்வரா, சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களால் "உயர்தரப் பாடத் தெரிவுகளும் அதன் விளைவுகளும்" எனும் தலைப்பில் செயலமர்வு நடாத்தப்பட்டது.


காலை 11.00 இலிருந்து பி.ப 12.30 வரை வைத்திய கலாநிதி செல்லத்துரை ஆனந்தவரதன் (ஐக்கிய இராச்சியம்) அவர்களால் உயர்தரப்பிரிவு 2026 மாணவர்களுக்கு "மாணவர்களுக்கான தலைமைத்துவம்" பற்றிய செயலமர்வு நடாத்தப்பட்டது.




2024.06.10 திங்கட்கிழமை 2026 உயர்தரப்பிரிவு மாணவர்களுக்கு "உளவிருத்திச் செயற்பாடுகள்" செயன்முறைச் செயலமர்வை வைத்திய கலாநிதி ஜெகரூபன் நடாத்தினார்

2024.06.11 செவ்வாய்க்கிழமை காலை 8.30 இலிருந்து 10.30 வரை திசைமுகப்படுத்தல் செயலமர்வில் சிரேஷ்ட சட்டத்தரணி கலாநிதி குமாரவடிவேல் குருபரன் அவர்கள் "பாடசாலைக் கல்வியும் உயர்கல்வி வாய்ப்புக்களும்" என்ற தலைப்பில் கருத்துரை வழங்கினார்

காலை 11.00 இலிருந்து பி.ப 12.30 வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்ட பீட மாணவன் செல்வன் சிவகஜன் அவர்கள் "கல்வியும் சமாகாலச் செல்நெறியும்" என்ற தலைப்பில் 2026 உயர்தரப்பிரிவு மாணவர்களுக்கு கருத்துரை வழங்கினார்.

2024.06.12 புதன்கிழமை காலை 8.30 இலிருந்த 10.30 வரை திசைமுகப்படுத்தல் செயலமர்வில் பொறியியலாளர், துமி பத்திரிக்கை ஆசிரியர் மற்றும் சிவபூமி பத்திரிகை உதவி ஆசிரியர் சண்முகானந்தன் சந்தோஷன் அவர்கள் "நவக்கிரகங்கள்" என்ற தலைப்பில் மாணவர்களது ஆற்றல்களை வினைத்திறனாக்குவது தொடர்பாக கருத்துரை வழங்கினார்.




காலை 11.00 இலிருந்து பி.ப 12.30 வரை சூழலியலாளர் ஐங்கரநேசன் 2026 உயர்தரப்பிரிவு மாணவர்களுக்கு கருத்துரை வழங்கினார்.



# சிறப்பாக நடைபெறும் நயினை நாகபூசணி அம்பாள் மகோற்சவம்

நயினாதீவு நாகபூசணி அம்மன் கோயில் குரோதி வருட 2024 ஆண்டுக்கான மஹோற்சவம் (07-06-24) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி மிகச்சிறப்பாக நடைபெற்றுவருகிறது. கடல் தாண்டி வந்து அன்னையை வழிபட பெருமளவு பக்தர்கள் தொடர்ச்சியாக வருகை தந்தவண்ணம் உள்ளார்கள்.













# பேராசிரியர் துரைராஜாவின் முப்பதாவது நினைவேந்தல் நிகழ்வு

யாழ்.பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சியில் அமைந்துள்ள பொறியியல் பீடத்தில் கடந்த 11.06.2024 அன்று மறைந்த முன்னாள் யாழ் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் துரைராஜா அவர்களின் 30வது நினைவேந்தல் நிகழ்வு மிகச் சிறப்பாக நடைபெற்றது. ”துரையின் விதி” உட்பட பல சாதனைகளை தன்வாழ் நாளில் நிலைநாட்டி, யாழ் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடம் உருவாக பிரதான காரணமாக இருந்தவர்களில் முதன்மையானவர் பேராசிரியர் துரைராஜா அவர்கள் என்றால் அது மிகையில்லை.









இந்தப் பத்திரிகை சிவபூமி அறக்கட்டளையால் வெளியிடப்பட்டுள்ளது.(ஆனி 2024) ISBN-978-955-7420-00-4